திரு. யா.சை.மு. யூசுப்: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் உயர் கல்வியைப் பற்றிச் சொன்னுர்கள். ஆனுல் அடிப்படைக் கல்விக்கே தகுந்த வழிவகைகள் செய்து தரப்படவில்லை. குறிப்பாக, அரபி மொழி ஒரு பழமை வாய்ந்த மொழி. அத்துடன் ஒரு சமுதாயத்தினர் தங்களுடைய வேத நூலை ஓதுவதற்குப் படிக்கின்ற ஒரு மொழியாகும். எனவே, கீழ் மட்டத்திலே ஆங்காங்கே உள்ள கிராமங்களிலே இந்த மொழியை போதிப்பவர்களுக்கு ஏதாவது உதவித் தொகை தர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, உதவித் தொகை தருவதற்கான ஏற்பாடு எதுவுமில்லை. ஆனுல் அப்படிப்பட்டவர்களது தொகைக்கேற்ப வசூல் செய்துகொள் வதற்கான முயற்சிகளைப் பற்றி பரிசீலனை செய்யப்படும் என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. ஆறுமுகம்: பேரவைத் தலைவரவர்களே, சேலம் மாவட்டத்தில் என்ஜினீயரிங் கல்லூரிக்கு அருகாமையில் அரபிக் கல்லூரி ஒன்று இஸ்லாமிய மதத்தினரால் நடத்தப்பட்டு வருகிறது. அப்படி தனியார் துறையில் நடைபெறக்கூடிய கல்லூ ரிக்கு அரசு மானியம் வழங்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அரசு விதிகளுக்கு உட்பட்டு அது வருமேயானுல் கவனிக்கப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறிய விளக்கத்திலிருந்து நந்தனம் கலைக் கல்லூ ரியில் 20-க்கும் குறைவான மாணவர்கள்தான் அரபி மொழியைப் பயிலுகிருர்கள் என்பதும் அவர்களைப் பயிற்றுவிப்பதற்கு இரண்டு ஆசிரியர்கள் தான் அங்கே பணியாற்றுகிருர்கள் என்பதும் தெரிய வந்தது. இப்படி இருபது மாணவர்களுக்கு இரண்டு ஆசிரியர்கள் என்பது அதிகச் செலவாகாதா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, இது சிறுபான்மையினரின் நலன் கருதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. உறுப்பினர் கூறிய அந்த அடிப்படையிலே அணுகவில்லை என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புனுலாம்பட்டியில் பழங்காலச் சின்னங்கள்.

*வினு 610— திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்கண்ட வினுக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) கோவை மாவட்டம், புனுலாம்பட்டி கிராமத்தில் பழங்காலச் சின்னங்கள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

1978 மார்ச் 18]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:

(அ) புலாம்பட்டி கிராமத்திலிருந்து தொல்பொருள்கள் ஏதும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால் போனுமாமபட்டி என்ற கிராமத்திலிருந்து பழங்காலச் சின்னங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

(ஆ) விவர அறிக்கை *ஒன்று பேரவையின்முன் வைக்கப் பட்டுள்ளது.

ஆனைகுளம் ஊராட்சி.

*வினா611— திரு. யா.சை.மு. யூசுப்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நெல்லை மாவட்டம், வள்ளியூர் ஒன்றியத்திலுள்ள ஆனை குளம் ஊராட்சியை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் ஏதாவது அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

இதுபற்றிய கருத்து ஊரக வளர்ச்சி இயக்குநரால் பரிசீலிக்கப் பட்டு ஏற்கப்படவில்லை.

திரு. யா.சை.மு. யூசுப்: தலைவரவர்களே, இந்த ஆனைக் குளத்தினைப் பொறுத்தவரையில் ஊரக வளர்ச்சி இயக்குநரால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பது சரியான கருத்தாகும். இருந்தபோதிலும், வள்ளியூர் ஊராட்சி ஒன்றியத்தில் 20 ஊராட்சி மன்றங்களில் பல ஊராட்சிகள் பிரிக்கப்பட வேண்டி யிருக்கிறது. மேலும் பணகுடியில் இருக்கும் 14 வார்டுகளை 15 வார்டுகளாக மாற்ற வேண்டிய உத்தரவு உள்ளது. தேர்தல் வருவதற்குள்ளாக இந்த மாற்றத்தைச் செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: கேள்வி, ஆனைகுளம் ஊராட்சி பற்றியது. மற்ற ஊராட்சிகள் பற்றிய விவரங்களைத் தருவதற்கில்லை. இனிமேல் பிரிப்பதற்கு ஏது இல்லை.

---

*145-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.